ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் ஆவணி முழுமதி அருளாசி நூல்**

27.08.2026

1. அருமருந்தாகி நின்ற சிவத்தை போற்றி
அறிவிப்பேன் அரங்கன் யான் அருளாசி
வரமாக பிரணவக் குடில் தனக்கும்
வல்லமைமிக்க தொண்டர் பெருமக்கட்கும்

2. நிர்வாகத்திற்கும் ஓங்காரக்குடிலின்
அன்பர்கள் வினை வெல்லும்
மாதர்மத்திற்கும் இனிதே
பாதுகாப்பு குறித்த நிர்வாக வளர்ச்சிக்கும்

3. ஓங்காரக்குடிலின் செயல் வெற்றிக்கும்
இனிதே அரங்கன் யான்
ஆசி தந்து உடனிருக்கின்றேன்
அச்சமற இன்று பராபவ

4. வேங்கை திங்கள் பௌர்ணமி
ஆறுமுகப் பெருமான் துணைபடவும்
அரங்கன் என் அனுகூலத்தோடும்
ஞானியர் படைகள் சூழ இனிதே

5. விழா மிகச்சிறப்பாக நடந்தேறி வருகின்றது
இவ்விழாவில் மக்களுள் மக்களாக
ஞானியர்களும் சூட்சுமமாக
வந்து செல்கின்றனர் அப்பா

6. அப்பனே குடிலின் தர்மம் சிறப்பு
இன்னும் அளவிலா வண்ணம்
தர்ம பலம் பெருகவும்
இந்த அன்னதானத்திற்கு

7. தடை வாரா வண்ணம்
பொருளாதார பலம் பெருகவும்
இன்னும் தொண்டர் படைகள் பெருகவும்
தொண்டர் பெருமக்கட்கு சோர்வில்லா வண்ணம்

8. ஆற்றல்பட அவர்களெல்லாம்
சுறுசுறுப்பாகவும் முழு சரணாகதியோடு
இயங்கவும் அரங்கன் என் பரிபூரண
ஆசியும் அனுகூலமும் உண்டு உண்டு

9. இந்தவித நன்னாளில் வரமாக
அரங்கன் யான் ஜோதி ரூபிலே
அமுதின் ரூபிலே சூட்சும
வடிவிலே வரம் தந்துள்ளேன்

10. உள்ளபடி இன்று அரங்கன்
என் தடம் வந்து இனிதே
என் சீடன் கரம்பட
தீட்சை பெற்ற மக்கட்கெல்லாம்

11. அரங்கன் யானே சூட்சுமமாய்
தீட்சை வரம் தந்துள்ளேன்
உள்ளபடி யாவர்க்கும்
சர்வ காரிய வெற்றிக்கு

12. இன்று ஆசி தந்துள்ளேன்
இனிதே தர்மம் பெருகவும்
தர்மத்தின் வழி மக்கள்
கூட்டம் தர்மவான்களாக

13. தர்மத்தில் பொருளுதவி
செய்து நிலை உயரவும்
அரங்கன் யான் இன்று
ஆசி தந்துள்ளேன்

14. உள்ளபடி குடிலின் நிர்வாகம் சிறப்பு
உயர்வுபட தொண்டர்களும்
மகிழ்ச்சியோடு தொண்டாற்ற
அதற்குண்டான ஏது செய்து

15. அரங்கன் யான் அவர்கள்
தேவைகள் பூர்த்தி படவும்
அவர்கட்கு சுயமான வகையில்
செயல்பாடுகள் அனைத்திலும்

16. வெற்றி கொள்ளவும் ஓங்காரக்குடில் நோக்கி
இனிதே அவர்களெல்லாம் சரணாகதி கொண்டு
முழு விசுவாசம்பட நடக்கவும்
அரங்கன் யான் இன்று வரம் தந்துள்ளேன்

17. உள்ளபடி அற்புதங்கள் இன்னும்பல
ஓங்காரக்குடிலில் நடத்தி

அரங்கன் யானும் இன்னும்
உலகளாவிய வண்ணம்

18. மக்கள் வந்து செல்லவும்
வருவோரெல்லாம் ஞானத்தின் பேரிலும்
வருபவரெல்லாம் வினை நீங்கி
காரியங்கள் வெற்றி கொள்ளவும்

19. அரங்கன் யான் அருள்புரிகின்றேன்
ஆக்கமுடன் இனிதே இந்தவிதகாலம்
உலகளாவிய வண்ணம் நடக்கின்ற
இயற்கை வழியான சோடைகள்

20. அத்தனையும் நீக்கி அரங்கன் யான்
தர்மத்தின் வழி பாதுகாப்பு
இதுகாலம் துறையூர் மற்றும்
பிற பகுதிகள் வழி

21. தமிழகத்தை சார்ந்து
இயல்பான பருவமழை
நிகழ்வு காணா வண்ணம்
மக்களுக்கு தவிப்பும்

22. ஆங்காங்கே சில தடம்
தண்ணீர் பஞ்சம் போன்ற
சூழலும் உருவாகி இருக்க
இந்த சோடையெல்லாம் நீங்கி

23. இனிதே அரங்கன் தர்மத்தின் வழியும்
அரங்கன் என் சன்மார்க்கத்தின்
வழியும் ஆங்காங்கே பருவ மழை
பொழிய அரங்கன் யான் அருள் புரிவேன்

24. ஆறுமுகன் துணைபட சடுதி
எல்லா தடங்களிலும்
நீர்நிலை குன்றாத வண்ணம்
பெருமளவு மழை வளம் பெருகி

25. இனிதே சிறக்க அரங்கன்
என் பரிபூரண ஆசி உண்டு
என் தொண்டர் பெருமக்கள்
செல்லும் தடமெல்லாம்

26. ஞானிகள் பூஜை செய்வதோடு
நீர் நிலவளம் குறித்து
இனிதே அதற்குண்டான
வேண்டலும் சங்கல்பமும்

27. சங்கல்பமும் வைத்து இனிதே
பூஜை தொடர அனைத்து தடங்களிலும்
இயற்கை இறங்கி அரங்கன்
சன்மார்க்கத்தின் வழியும் தர்மத்தின் வழியும்

28. மழை வளம் பெருகி எல்லா பகுதியிலும்
நீர் நிலவளம் குறைவில்லா வண்ணம்
வளமும் பசுமையும் வளர்ச்சியும்
இந்த தேசம் முழுக்க

29. காண அரங்கன் என்
பரிபூரண ஆசி உண்டு
அரங்கன் யான் அருளிய
ஆசி விளக்கம் முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி